செய்தி வெளியீடு எண்.978 நாள்.11.11.2008

# செய்தி வெளியீடு

உள்ளாட்சி அமைப்புகளில் நிலையான, நீடித்த உட்கட்டமைப்பு வசதிகளை ஜெர்மானிய நிதியுதவியுடன் (KFW) செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கு ஒப்பளிப்பு செய்வதற்கான அதிகாரமளிக்கப்பட்ட உயர்மட்ட குழுவின் முதல் கூட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் இன்று (11.11.2008) நடைபெற்றது.

நகர்ப்புறங்களில் வசிக்கக்கூடிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக அப்பகுதிகளுக்கு தேவையான குடிநீர் வசதி மற்றும் சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக நீண்டகால நிதியுதவியை உள்ளாட்சி அமைப்புகளுக்கு தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனம் செய்து வருகிறது.

உள்ளாட்சி அமைப்புகளின் அதிகபட்ச நிதித்தேவையை கருத்தில் கொண்டு ஜெர்மன் வளர்ச்சி வங்கியிடம் ரூபாய் 500 கோடிக்கான நிதியுதவிக்கான ஒப்பந்தம் 9.7.2008 அன்று செய்துக்கொள்ளப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட நிதியினை முறைப்படுத்தி திட்டங்களுக்கு ஒப்பளிப்பு செய்யவும், மானியம் அளிக்கவும் நிர்வாக அனுமதி வழங்குவதற்காக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், நிதித்துறை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர், நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகள் ஆணையர் மற்றும் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்

ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட உயர்நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் முதல் கூட்டம் இன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஈரோடு, திருப்பூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, பண்ருட்டி மற்றும் விழுப்புரம் நகராட்சிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம், மழைநீர் வடிகால் திட்டம், குடிநீர் மேம்பாட்டு திட்டம் மற்றும் சென்னை மாநகராட்சி மூலம் 8 பாலங்கள் கட்டுவதற்கான திட்டத்திற்கும் சேர்த்து ரூபாய் 498 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., நிதித்துறை முதன்மை செயலர் திரு.ஞானதேசிகன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகத்துறை ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் திரு.செந்தில்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு.பனீந்தர் ரெட்டி, இ.ஆ.ப., பேரூராட்சிகள் துறை ஆணையர் டாக்டர் கோபால், இ.ஆ.ப. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சுவரன்சிங், இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**